# சங்க இலக்கிய ஆற்றுப்படை கலைஞர்களின் வாழ்க்கை முறை

ர. அனிதா
உதவிப் பேராசிரியர், தமிழியல் துறை
கேஜி கலை அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர்



## முன்னுரை

சங்க இலக்கியம் இலக்கிய வளமும் இலக்கண வளமும் பெற்று தனித்தியங்கவல்ல தனிச்சிறப்பினை உடையது. தமிழர்களின் மிகநீண்ட பண்பாட்டிற்கும் நனிசிறந்த நாகரிகத்திற்கும், அறிவுப்பெருக்கத்திற்கும், பழம்பெரும் மரபுகளை புரிந்து கொள்வதற்கும், தமிழரின் அறிவியல் நுட்பத்திற்கும் சான்றாக விளங்குகின்றது. சங்ககால வாழ்க்கை முறை இயற்கையமைப்பை அடிப்படையாகக் கொண்டது. மக்களின் உணவு தொழில் பழக்கவழக்கங்கள் பொழுது போக்ககுகள், மனப்பாங்கு, சமயநம்பிக்கைகள் அனைத்தையும் சங்க இலக்கியங்கள் சித்தரிக்கின்றன. ஆடல் பாடல் இசைக் கலையில் சிறந்து விளங்கிய பாணர், கூத்தர், விறலியர், பொருநர் உள்ளிட்ட தொழில்முறை கலைப்படைப்பாளர்களான ஆற்றுப்படை கலைஞர்களின் வாழ்க்கை முறைகளை அறிய முயல்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## சங்க இலக்கியத்தில் கலைஞர்கள்

சங்க இலக்கியத்தில் சிற்பக்கலையில் சிறந்து விளங்கிய கலைஞர்களை நூலறி புலவர், தச்சர், கம்மாளர், மண்ணீட்டாளர் என்றும் ஓவியக்கலையில் சிறந்து விளங்கியவர்களை கண்ணுள் வினைஞர் என்ற பெயராலும் இசை நடனம் போன்ற கலையில் சிறந்து விளங்கிய கலைஞர்களை பாணர், கூத்தர், விறலியர், பொருநர் என்ற பெயராலும் அழைக்கப்படுவதை இலக்கியங்களின் வழி அறிய முடிகிறது. பிறதுறைக் கலைஞர்களை விட இசையோடு தொடர்புள்ள கலைஞர்கள் இலக்கியத்தில் சிறப்புப் பெற்றிருந்தனர். இதற்குக் காரணம் பிற கலையில் தேர்ச்சியடைந்தவர்களைப் பற்றிய வாழ்வியல் செய்திகள் அதிகமாக இலக்கியத்தில் பதிவு செய்யப்படவில்லை. ஆனால் இசையோடு தொடர்புடைய கலைஞர்களின் வாழ்க்கைமுறைப் பதிவுகளை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்கள் படம் பிடித்துக் காட்டுகின்றன.

## கலைஞர்கள்

வாழ்க்கைமுறை (ம) தொழில்முறை → இசைக்கருவி தொடர்பு → பாணர். கூத்தர், விறலியர், பொருநர்,
வாழ்க்கைமுறை (ம) தொழில்முறை → இசைக்கருவி → புலவர்
தொழில், → சிற்பம், ஓவியம் பிற

பாணர், கூத்தர், விறலியர், பொருநர் என்ற இசைக்கலையோடு தொடர்பு கொண்ட கலைஞர்கள் தத்தம் கலைத்திறமையால் பாகுபடுத்தப்பட்டனர் என்றாலும் அவர்கள் அனைவரையும் பாண் சுற்றத்தினர் என்றே அழைத்தனர். ஏனெனில் மற்ற கலைஞர்களை விட இலக்கியத்திலும் பாணனே அதிக இடத்தைப் பெறுகிறான். இசைக் கலைஞர்களின் வரிசையில் புலவர்களும் பாண் சுற்றத்தினரோடு தொடர்பு வைத்துக் கொண்டாலும் கலை என்னும் படைப்புத்திறனை நோக்கும்போது

வேறுபட்டே காணப்படுகின்றனர். எனினும் பாண் சுற்றத்தினரின் வளர்ச்சிக்குப் பெரிதும் துணைபுரிபவர்களில் புலவர்களும் ஒருவர் என்பது மறுக்க முடியாத உண்மை.

**கலைஞர்களின் வகை**

கலைஞன் இயற்கையிலிருந்தும் சமுதாயத்திலிருந்தும் தான் பெற்ற அனுபவங்களை உணர்ச்சியுடன் வெளிப்படுத்தும் போது அவை கலையாகப் பரிணமிக்கின்றன. இத்தகைய கலைஞர்களை உணர்ச்சிக் கலைஞர்கள் என்று கூறலாம். சங்க இலக்கியத்தில் இடம் பெறும் கலைஞர்கள் படைப்புத்திறனைப் பொறுத்தே வேறுபடுகின்றனர் என்பதைப் பின்வருமாறு விளக்கலாம்.




ஆற்றுப்படைக்குறிய கலைஞர்கள், வாழ்க்கை முறையிலும் தொழில் முறையிலும் சிற்சில வகைகளில் வேறுபட்டவர்கள். ஆனால் அவர்கள் அனைவரும் கலையையே தொழிலாகக் கொண்டதில் ஒன்றுபட்டவர்கள்.

**சங்க இலக்கியத்தில் ஆற்றுப்படை**

சங்க இலக்கியத்தில் ஆற்றுப்படைப் பொருளில் அமைந்த செய்யுட்கள் சில. அவை, புறநானூறு, பதிற்றுப்பத்து, பத்துப்பாட்டு ஆகிய மூன்று தொகை நூல்களிலும் காணப்படுகின்றன. புறனானூற்றில் விறலியாற்றுப்படை, பாணாற்றுப்படை என இருவகையைக் காணலாம். இதேபோல பதிற்றுப்பத்திலும் விறலியாற்றுப்படை, பாணாற்றுப்படை என்ற இருவகையையே காணலாம்.

பத்துப்பாட்டில் பாணாற்றுப்படை உண்டு. அதோடு பொருநராற்றுப்படை, கூத்தராற்றுப்படை என வேறு இருவகையைக் காணலாம். ஆனால் விறலியாற்றுப்படை இல்லை. கூத்தராற்றுப்படை அப்பெயரில் இல்லாமல் மலைபடுகடாம் என குறிக்கப்பட்டுள்ளது. அப்பாடலில் கூத்தர் என்ற சொல் வரவில்லை. அதற்குப் பதிலாக கண்ணுளர், வயிரியர், கோடியர் என்னும் சொற்களே வருகின்றன.

**ஆடல் பாடல் கலைஞர்களின் தோற்றம்**

குழுவாழ்க்கையில் நடனம் ஒரு சமூக நிகழ்ச்சியாகும். துணங்கை, வள்ளை, குரவை முதலிய கூத்துக்கள் இனக்குழு வாழ்க்கையில் இருந்தன. இவை போன்ற கூத்துக்கள் இன்றும் தென்னிந்திய இனக்குழு மக்களிடையே காணலாம். இதில் இனக்குழு மக்கள் அனைவரும் பங்கு கொள்வர். தனியான கலைஞர்களும் இரசிகர்களும் என்ற பிரிவில்லை. இக்கூத்தின் நோக்கம் ஏதாவது வாழ்க்கைப்பயன்பாடே ஆகும். காமம், வெற்றி, செழிப்பு, மழை, வேட்டை முதலியவற்றிற்காக கூத்துக்கள் அமைந்தன.

குழு வளர்ச்சி பெறும்பொழுது, வேலைப் பிரிவினை தோன்றுகிறது. ஆப்பொழுது ஆடல் பாடல்களில் வல்லவர்களுக்கு, கூத்தும் பாட்டும் தொழிலாகிவிடுகிறது. இந்நிலையிலேயே பாணர், கூத்தர், பொருநர், விறலியர் போன்றவர் ஆடல், பாடல் கலையைத் தொழிலாகக் கொண்டவர்களான ஒரு சமூகப்பிரிவு தோன்றியது. நாளடைவில் இவர்கள் கலையை வளர்த்தனர். தங்கள் வாழ்க்கையை அதனைக் கொண்டு நடத்தினர். இதனை,

> **கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்**
> **ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றி**
> **பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறிஇச்**
> **சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும் (தொல்: பொருள்: புறம்: 36)**

என்று தொல்காப்பியர் தனது புறத்தினையியல் நூற்பாவில் ஆற்றுப்படைக் கலைஞர்களுக்கான இலக்கணத்தைச் சிறப்பாக வகுத்தளித்துள்ளார்.

**கலைஞரின் மரபுகள்**

கலைஞர்கள் காட்டிலுரையும் தெய்வத்தை வழிபடும்முறை, கோவிலில் வழிபடும்முறை, நடுகல் வழிபாட்டுமுறை, அரசனைக் கண்டால் நடந்து கொள்ள வேண்டிய முறை என்று பல மரபுகளைக் கடைபிடித்து வந்தனர். விறலி அரசனைக் கண்டால் நடந்துகொள்ள வேண்டிய முறைகளை அறிந்தவள். முதலில் பழைய மரபுப்படி பாடுவாள். அதாவது கலைஞர்களுக்கு வகுத்த இலக்கணம் தப்பாமல் அறிய ஆற்றல் வாய்ந்த கடவுளை முதலில் வாழ்த்துவாள். இச்செய்தி வாய்மொழிப்பாடல் அங்கங்கே புனைந்துபாடுதலை எடுத்துக்காட்டுகிறது. இவற்றால் தொழில்முறைக் கலைஞர்கள் இடம், பொருள், ஏவலுக்கு ஏற்றபடி தமக்கென்று பல முறைகளை வகுத்துக்கொண்டு அதனின்றும் மாறாமல், அதனைத் தொடர்ந்து கடைபிடித்து வந்தனர் என்பது புலப்படுகிறது.

**குடும்பச் சூழ்நிலை**

விழியாத கண்களை உடைய நாய்க்குட்டிகள் அவை பாலுண்ண முடியாமல் அதனால் ஏற்படும் வருத்தமும், பசித்துன்பத்தாலே ஏற்படும் வருத்தமும் பொறுக்க முடியாமல் தாயாகிய நாய் படுத்திருக்கும் அடுக்களை, அதன் கூரையிலுள்ள கழிகள் விழுந்து விட்டன. பழஞ்சுவரிலோ கரையான் அப்பிக்கொண்டிருந்தன. அங்கு காளான்கள் பூத்து விளங்குகின்றன. அத்தகைய அடுக்களையில் பசியால் வருந்தும் மனைவி நகத்தால் கிள்ளிய குப்பைக்கீரையை உப்பில்லாது வேக வைத்தாள். வருமை வருதல் இயல்பென்பதை உணராமல், புறஞ்சொல்லுவோர் காண்பதற்கு வெட்கி தலைவாசலை அடைந்தாள். பின்னர் தம் பெரிய சுற்றத்தோடு பகிர்ந்துண்டாள். இந்நிலையில் எத்தனை நாட்களை கடத்திட முடியும்?

இவ்வாறு வறுமை கலைஞரை ஆற்றுப்படுத்தியது. ஓரிடத்தில் இராமல் வறுமை தீர்ப்பார் யார் என்றும் தமது கவிழ்ந்த பாத்திரத்தை உணவிட்டு நிமிர்த்தக்கூடியவர் யாரென்றும் தேடினர். மொத்தத்தில தம்மைப் பாதுகாப்பவரைத் தேடி அலைந்தனர். கலைஞர் மிக்க பசியால் வாடினர், வாடிய உடம்பினர். இப்பசி அறிவு முதலானவற்றை அழித்தற்குக் காரணமானது. தன்னையே வெறுக்கச் செய்வது. கலைஞர் கரிய பெரிய சுற்றத்தினை உடையவர். அவர்களும் பெரும் பசியால் வாடினர். அதனால் வருத்தம் பொருந்திய மனத்தினர் அழுதனர். அழகிழந்த உடம்பினர். உடும்பை உரித்தாற் போன்ற எலும்பு துரித்துக்கொண்டிருக்கும் விலாக்களை உடையவர். இவ்வாறு பசிக்கொடுமையும் பெரிதும் கலைஞர்களை வாட்டியது. கலைஞன் கொல்லுகின்ற பசித்துயரால் வாடினான் என்பதை,

**ஆடுபசி உழந்த நின் இரும்பேர் ஒக்கலொடு**
**நீடு பசி ஒரா அல வேண்டின் நீடு இன்று (பொருநர் 60-61)**

என்ற பொருநராற்றுப்படை வரிகள் புலப்படுத்துகிறது.

மேலும், கலைஞர்கள் தங்கள் சுற்றத்தாரோடு அடைந்த பசித்துன்பத்தினைப் பற்றிய செய்தி,

**வெந் தெறல் கனலியொடு மதிவலம் திரிதரும்**
**தண்கடல் வரைப்பில் தாங்குநர்ப் பெறாது**
**பொழி மழை துறந்த புகைவேய் குன்றத்துப்**
**பழுமரம் தேரும் பறவை போலக்**
**கல் என் சுற்றமொடு கால் கிளர்ந்து திரிதரும்**
**புல்லென் யாக்கைப் புலவு வாய்ப் பாண! (பெரும்பாண் 17-22)**

என்ற வரிகளில் வெப்பத்தால் சுடுகின்ற சூரியனும், சந்திரனும் சுற்றிவரும் குளிர்ந்த நீர்நிறைந்த கடல் சூழ்ந்த இந்த உலகில், தன்னையும் தன் சுற்றத்தாரையும் தாங்குவோர் இல்லாமையால் வெப்பத்தால் காய்ந்த நிலத்தில் விழுந்த மழைத்துளிகளால் எழுந்த ஆவி புகைபோலப்படிந்த மலைக்குன்றில் உள்ள பழுத்த பழமரங்களைத் தேடிப்போகும், ஓரிடத்தில் தங்கி நிலைக்காது வறுமையால் வாடும், சுற்றத்தாருடன் தான் கற்ற கல்வியைத் தன் வறுமை காரணமாகத் தானே வெறுத்துப் பேசுகின்ற வாய் உடைய பாணனே! என்று கூறுவதன் மூலம் அவர்களின் பசித்துன்பம் புலப்படுகிறது.

**கலைஞர் மன்னர் தொடர்பு**

பழுத்த மரத்தைப் பரவை நாடிச் செல்வது போலவும், மலையில் தோன்றிக் கடலை நோக்கிச் செல்லும் ஆறுகளைப் போலவும் அரசரைக் கலைஞர் நாடிச் சென்றனர். நெருஞ்சிப்பூ சூரியனை

நோக்கி மலர்தல் போல கலைஞரது பாத்திரம், வள்ளலது மார்பு நோக்கி மலர்ந்தது. அரசனும் காலந்தப்பாது பெய்யும் மழையைப் போல் கலைஞருக்கு உதவினான்.

வறண்ட காட்டில் திடீர் மழை பொழிந்து காடு செழித்தது. அதுபோல வறிய கலைஞர் சுற்றத்தாருடன் மகிழ அரசர் நிறைந்த செல்வத்தைக் கொடுத்தனர். அரசரது புகழை விதைத்து அவரிடம் பொருளை அறுவடை செய்தனர் கலைஞர். கலைஞர் சொல்லேர் உழவர் ஆவர். அவர்க்கு, புது வெள்ளப்பெருக்குப்போல் வந்து பயன் கொடுத்தான் அரசன் என்பதை,

**இசைநுவல் வித்தின் நசையேர் உழவர்க்குப்**
**புதுநிறை வந்த புலனஞ் சாயல் (மலை: 60,61)**

என்ற மலைபடுகடாம் வரிகள் புலப்படுத்துகின்றன.

**பாணர்கள்**

பாணர்களின் வாழ்க்கை மன்னர்களையும், வள்ளல்களையும் சார்ந்திருந்ததோடு அவர்கள் இருக்கும் இடத்திற்குச் சென்று கலையை வெளிப்படுத்திப் பரிசில் பெறும் நிலையிலேயே காணப்பட்டார்கள். இதனை,

**கையது கடன்நிறை யாழே மெய்யது,**
**புரவலர் இன்மையின் பசியே, அரையது**
**வேற்று அழை நுழைந்த வோ;நனை சிதாஅர்**
**ஓம்பி உடுத்த உயவல் பாண! (புறம்: 69)**

என்ற புறனாநூற்று வரிகள் அரசவையில் பாணர் நின்ற நிலையினையும், தொழிலையும், வறுமையினையும் விளக்குகின்றன. பாணணின் கையில் இலக்கணம் பொருந்திய யாழுடன், ஆதரிப்பார் இல்லாமையால் வயிற்றில் பசியுடன் இடையில் வேர்வையால் நனைந்த கந்தலாடையை உடுத்தியிருந்தான் என்று கூறும்போது பாணணின் வறுமை நிலையினையும் கலைத்திறனையும் அறிய முடிகிறது.

சங்க கால இசைக்கலைஞர்களில் பாணர்கள் சிறப்புப்பெற்றவராக விளங்கினார்கள். பண்களை குரல் வழியாகவும், யாழ், குழல் முதலிய இசைக்கருவிகள் வழியாகவும் பாணர்கள் தம் திறமையை வெளிப்படுத்தினார்கள். இத்தகைய பாணர்கள் தொல்காப்பிய காலத்திற்கு முன்பிருந்தே காணப்படுகின்றனர். நச்சினார்க்கினியர் பாணர்களை இசைப்பாணர், யாழ்ப்பாணர், மண்டைப்பாணர் என்று மூன்று வகையாகப் பிரித்துள்ளார்.

**களங்கனி அன்ன கருங்கோட்டுச் சீறியாழ்ப்**
**பாடுஇன் பனுவல் பாணர் உய்தெனக்**
**களிறு (புறம்: 57)**

என்ற புறநானூற்று வரிகளில் இசைப்பாணர்களைப் பற்றிய செய்தியும்

**வாங்குஇரு மருப்பின் தீந்தொடை பழுனிய**
**இடனுடைப் பேரியாழ் பாலை பண்ணி" (பதி.பத்து: 66)**

என்ற பதிற்றுப்பத்து வரிகளில் யாழ்ப்பாணர்களைப் பற்றிய செய்தியும்,

**விழவு இன்றாயினும் உழவர் மண்டை**
**இருங்கெடிற்று மிசையொடு பூங்கள் வைகுந்து" (புறம்: 384)**

என்ற புறநானூற்று வரிகள் மண்டைப்பாணர்கள் இருந்தமைக்கான சான்றினையும் தருகின்றது.

மேலும் பத்துப்பாட்டில் சிறியயாழ்ப்பாணர்கள் மற்றும் பெரியயாழ்ப்பாணர்கள் என இரு வகையான பாணர்களையும் குறிப்பிட்டுள்ளது.

**விறலியர்**

பாணர் குலத்தில் பிறந்த பிரிவினருள் விறலியும் ஒருவர். விறல் என்னும் சொல் வெற்றியைக் குறிக்கும் சொல்லாகும். மன்னரின் வெற்றியைப் புகழ்ந்து பாடுவதும், தன்னுடைய உள்ளக்குறிப்பை விரல்களின் மூலம் வெளிப்படுத்துவதும் இவரியல்பாதலால் விறலி என அழைக்கப்பட்டாள். சங்க இலக்கியம் விறலியை இசையோடும் ஆடலோடும் தொடர்புடையவளாக 42 இடங்களில் பதிவு

செய்துள்ளது. பாணர் குலத்தில் பிறந்த விறலியும், பாடினியும் ஒருவரே என்ற கருத்து நிலவுகிறது. ஆனால் தொல்காப்பியமும் பரிபாடலும் இருவரும் வேறுவேறானவர் என்று கூறுகிறது. இதனை,

**தோழி, தாயே, பார்ப்பன், பாங்கன்,**
**பாணன், பாடினி, இளையர், விருந்தினர்,**
**கூத்தர், விறலியர், அறிவர், கண்டோர்**
**யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப. (தொல்: கற்: நூற்: 191)**

என்ற தொல்காப்பியரின் நூற்பா வழி அறிய முடிகிறது. பாடும் இயல்பும் ஆடும் இயல்பும் உடையவள் விறலி என்பதை,

**ஒருதிறம் பாடல் நல்விறலியா; ஒல்குபு நுடங்க (பரி: 17)**

என்றும், குரல் வழியாக பாலைப் பண்ணை பாடினி பாடினாள் என்பதை,

**ஒருதிறம் பாடினி முரலும் பாலை அம்குரலின்**
**நீடுகிளர் கிழமை நிறை குறை தோன்ற (பரி: 17)**

என்றும் பரிபாடல் கூறுவதன் மூலம் விறலியும் பாடினியும் வேறுவேறானவர்கள் என்பதை அறிய முடிகிறது.

**பொருநர்**

பொருநரும் பாணரைப் போன்று இசைமரபைச் சார்ந்தவராவர். சங்க இலக்கியத்தில் பொருநன் என்ற சொல் வீரன், அரசன், கூத்துக்கலைஞன் என்ற பல பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**நாஞ்சில் பொருநன்" (புறம்: 140)**
**நல்நாட்டுப் பொருநன்" (புறம்: 70)** என்று அரசனைக் குறிக்கவும்,
**கொல்லிப் பொருநன்" (புறம்: 152)**
**தொண்டிப் பொருநன்" (நற்:18)**

என்று தலைவனைக் குறிக்கவும், பகைவர் என்ற பொருளினைக் குறிக்கவும் பொருநர் என்ற சொல் கையாளப்பட்டுள்ளது. பொருநரை ஏர்க்களம் பாடும் பொருநர், போர்க்களம் பாடும் பொருநர் என்று வகைப்படுத்தலாம். சங்க இலக்கியத்தில் குறிக்கப்படும் பொருநர் போர்க்களத்தோடு தொடர்புடையவராவர்.

போர்க்களப் பொருநர், போர்க்களத்திற்குச் சென்று வீரர்கள் உற்சாகம் அடையுமாறு முரசினைக் கொட்டி வஞ்சியைப் பாடினர் என்பதை,

**ஒருகண் மாக்கினை தெளிர்ப்ப ஒற்றிப்**
**பாடுஇமிழ் முரசின் இயல் தேர்த்தந்தை**
**வாடா வஞ்சி பாடினேன் (புறம்: 394)**

என்று புறநானூறு சுட்டுகிறது. அதேபோல் பாசறையில் இருக்கும் மன்னரைக் காலையில் கிணையினைக் கொட்டி துயில் எழுப்பும் வழக்கம் கொண்டவர்களாகவும் பொருநா;கள் இருந்துள்ளனர்.

மன்னர்கள் பொருநருக்குப் பல பரிசில்களையும், அணிகலன்களையும் அவர்களின் வறுமை நீங்குமளவு அளித்ததால் இதுவரை அணிகலன்களை அணிந்து பழக்கமில்லாத பொருநர் சுற்றத்தினர் காதில் அணியும் குழையை விரலிலும் விரலில் அணியும் மோதிரத்தைக் காதிலும் மாற்றி மாற்றி அணிந்தனர் என்பதை,

**விரற்செறி மரபின செவித்தொடக்கு நரும்**
**செவித்தொடர் மரபின விரற்செறிக் குநரும்**
**அரைக்கு அமை மரபின மிடற்றுயாக் குநரும்**
**மிடற்று அமை மரபின அரைக்குயாக் குநரும்" (புறம்: 378)**

என்று புறநானூறு கூறுவதன் மூலம் பொருநர்களின் கலைத்திறனைதக் கண்டு, வறுமை நீங்குமாறு வரையறாது பொருளைப் பரிசிலாக மன்னர்கள் அளித்தனர் என்பதை அறிய முடிகிறது.

**கூத்தர்**

தொல்காப்பியர் குறிப்பிடும் நால்வகைக் கலைஞருள் கூத்தர் என்போர் பாடுவதோடு, ஆடவும் செய்யும் கலைஞராவர், கூத்து என்ற சொல்லானது ஆடல், நாட்டிய நிகழ்ச்சி எனும் பொருளைக் குறிக்கிறது. அவர்களின் கூத்து எண்வகை உணர்ச்சிகளையும் அனைத்து மனக்குறிப்புகளையும் வெளிக்காட்டுகின்றது என்ற நச்சினார்க்கினியர் கூற்றின் வழி அறியலாம்.

சங்க காலத்தில் வெற்றியின் போதும், மகிழ்ச்சியின் போதும், திருவிழாக்காலங்களின் போதும், மகிழ்ச்சியின் போதும் ஆண்களும், பெண்களும் சோ;ந்து பெருங்கூட்டத்தினருடன் ஆடிப்பாடினா். கூத்தா் மற்ற கலைஞா்களைப் போலவே மன்னா்களையும் மக்களையும் நாடிச்சென்று கலையை வெளிப்படுத்தினா். ஊரில் உள்ள பொது இடத்தில் இவா்கள் கூத்தை நிகழ்த்தியதால் பொதுமக்களிடம் நெருக்கமான உறவைக்கொண்டிருந்தனா். இவா்கள் கலைகளை வெளிப்படுத்தும் இடத்தை மன்றம் அல்லது மன்று என்று அழைத்தனா்.

கூத்து என்பது பலர் சேர்ந்து ஆடக்கூடிய குழு ஆடலாகும். சங்க காலத்தில் கூத்தர் குழுவோடு சேர்ந்து ஆடக்கூடியவர்களுக்குத் தலைவராக இருந்திருக்க வேண்டும். கூத்துத்தொழிலால் பெயர் பெற்ற கூத்தர் என்ற சொல் சங்க இலக்கியத்தில் ஓர் இடத்தில் மட்டுமே பதிவுசெய்யப்பட்டுள்ளது. சோழன் நளங்கிள்ளியின் நாட்டில் எல்லா வளங்களும் நிறைந்திருப்பது கூத்தருடைய ஆடுகளத்தை ஒத்திருக்கும் என்பதை,

**பூம்போது சிதைய வீழ்தென, கூத்தா**
**ஆடுகளம் கடுக்கும் அகநாட் டையே" (புறம்: 28)**
**விரிஉளை மாவும் களிறும், தேறும்**
**வயிரியா், கண்ணுளா்க்கு ஓம்பாது வீசி" (பதி.பத்து: 20)**

என்ற பதிற்றுப்பத்து வரிகள் குறிப்பிடுகிறது.

கடல்பிறகோட்டிய செங்குட்டுவன், தன்னை நாடி வந்த கோடியா்க்கும் அவனது சுற்றத்தினருக்கும் குதிரைகளைப் பரிசாக வழங்கினான் என்பதை,

**கோடியர் பெருங்கிளை வாழ, ஆடுஇயல்**
**உளைஅவிர் கலிமாப் பொழிந்தவை எண்ணின்" (பதி.பத்து: 42)**

என்ற பதிற்றுப்பத்து வரிகளின் மூலம் அறியலாம்.

**தொகுப்புரை**

சங்க இலக்கியத்தில் கலையைப் பற்றியும், கலைஞா்களைப் பற்றியுமான செய்திகள் பல இடங்களிலும் விரிந்து காணப்படுகின்றன. சங்க காலத்தில் கலையும், கலைஞா்களும் மன்னா்களால் ஆதரிக்கப்பட்டாலும், பெரும்பாலும் வறுமை நிலையிலேயே காணப்பட்டனா் என்பதும் அறிய முடிகிறது. மேலும் கலைஞா்கள் தம் கலைத்திறனை மன்னா்களிடத்தில் வெளிப்படுத்தி பொன், பொருள், மலை, நாடு, குதிரை, தோ் போன்றவற்றைப் பரிசிலாகப் பெற்றுள்ளனா். இதன் மூலம் கலை என்பது மனிதனின் மன வளா்ச்சியின் வெளிப்பாடே என்பதையும், மனிதா்கள் தன் ஆற்றலை இசை, நடனம், இலக்கியம், கைவினைப்பொருட்கள், ஓவியம் ஆகியவற்றின் மூலமாக வெளிப்படுத்தி சிறந்த கலைஞா்களாக திகழ்ந்து தங்களது வாழ்க்கையைக் கொண்டு சென்றுள்ளனா் என்பது நன்கு புலப்படுகிறது.

**பார்வை நூல்கள்**

1. ஞா. மாணிக்கவாசகன், பத்துப்பாட்டு மூலம் (விளக்க உரையுடன்).
2. தொகை நூல்கள், கழக வெளியீடு.
3. மா. இராசமாணிக்கனார், பத்துப்பாட்டு ஆராய்ச்சி.
4. கா. சுப்ரமணியன், சங்க காலச் சமுதாயம்.
5. தொல்காப்பியம், இளம்பூரணர் உரை.
6. கு.வெ. பாலசுப்ரமணியம், சங்க இலக்கியத்தில் கலையும் கலைக் கோட்பாடும்.